## சுருக்கம்

பள்ளிக் கல்வித் துறை – முன்னாள் தமிழக முதலமைச்சர் பெருந்தலைவர் காமராசர் அவர்களின் பிறந்த நாளான ஜூலை 15–ஆம் நாளினை அனைத்து பள்ளிகளிலும் கல்வி வளர்ச்சி நாளாக கொண்டாடுதல் – 2012–ஆம் ஆண்டில் சிறந்த பள்ளிகளை ஊக்குவிப்பதற்கான "பரிசளிப்பு திட்டம்" (Award Scheme) ஏற்படுத்துதல் – ஆணை வெளியிடப்படுகிறது.

---

பள்ளிக் கல்வி (என்) துறை

அரசாணை (நிலை) எண். 169 நாள் 06.07.2012

திருவள்ளுவராண்டு 2043
ஆனி 22
படிக்கப்பட்டது :

1. அரசாணை (நிலை) எண்.72, பள்ளிக் கல்வித் துறை, நாள் 24.05.2006.
2. அரசாணை (நிலை) எண்.184, பள்ளிக் கல்வித் துறை, நாள் 07.07.2010.
3. பள்ளிக் கல்வி இயக்குநரின் கடித எண்.35301/எம்/இ2/2012, நாள் 06.06.2012.
4. தொடக்கக் கல்வி இயக்குநரின் கடித எண்.14234/ஜே3/2012, நாள் 13.06.2012.

*******

ஆணை :–

மேலே முதலாவதாகப் படிக்கப்பட்ட ஆணையில் தமிழ் நாட்டில் கல்லாமை இருளை நீக்கப் பள்ளிகள் பல திறந்து கல்வி வளர்ச்சிக்கு அரும்பாடுபட்டுக் கல்விக் கண் திறந்த காமராசர் பிறந்த நாளான ஜூலைத் திங்கள் 15–ஆம் நாளை "கல்வி வளர்ச்சி நாள்" என அரசு அறிவித்தும் அந்நாளில் பள்ளிகளில் மாணவர்கள் புத்தாடை அணிந்து, விழா எடுத்து காமராசர் திருவுருவப்படத்தை அலங்கரித்து மகிழ்ச்சியுடன் கொண்டாட ஏற்பாடுகள் செய்யப்பட வேண்டும் என்றும் இவ்விழா அப்பள்ளி ஆசிரியர்கள் மேற்பார்வையில் நடப்பது சிறப்பாக இருக்கும் என்றும் அதற்காகும் செலவை பள்ளிக் கல்வித் துறை ஏற்கும் என்றும் ஆணை வெளியிடப்பட்டுள்ளது.

2) மேலே இரண்டாவதாகப் படிக்கப்பட்ட ஆணையில் 2010–ஆம் ஆண்டு, ஜூலை 15 பெருந்தலைவர் காமராசரின் பிறந்த நாளை கல்வி வளர்ச்சி நாளாக அறிவித்து அனைத்துப் பள்ளிகளிலும் விழாக் கொண்டாட அனுமதியும், இவ்விழாச் செலவினத்திற்காக, பள்ளிக் கல்வி இயக்குநருக்கு பெற்றோர் ஆசிரியர் கழக நிதியிலிருந்து ரூ.24,58,200/–ம் பெற அனுமதியும் மற்றும் அரசு நிதி ஒதுக்கீடாக பள்ளிக் கல்வி இயக்கக கட்டுப்பாட்டிலுள்ள உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிகளுக்கு ரூ.13,70,200/–ம் மற்றும் தொடக்கக் கல்வி இயக்குநரின் கட்டுப்பாட்டிலுள்ள தொடக்க மற்றும் நடுநிலைப் பள்ளிகளுக்கு ரூ.94,93,000/–ம் ஆக மொத்தம் ரூ.1,08,63,000/– ஒப்பளிப்பு செய்து ஆணை வெளியிடப்பட்டது.

3) மேலே மூன்றாவதாகப் படிக்கப்பட்ட கடிதத்தில், இவ்வாண்டும் பெருந்தலைவர் காமராசர் பிறந்த நாளான ஜூலை 15–ஆம் நாளில் பள்ளிகளில் கல்வி வளர்ச்சி நாள் விழா கொண்டாடவும், அவ்விழா செலவினங்களுக்காக பள்ளிக் கல்வி இயக்குநர் கட்டுப்பாட்டிலுள்ள 6,044 அரசு மற்றும் நிதி உதவி பெறும் உயர் மற்றும் மேல்நிலைப் பள்ளிகளில் கொண்டாடுவதற்கு பெற்றோர் ஆசிரியர் கழக நிதியிலிருந்து ரூ.24,58,200/– செலவிட அனுமதியும் மற்றும் அரசு ஒதுக்கீடு செய்துள்ள தொகை ரூ.13,70,000/– க்கு ஒப்பளிப்பு ஆணையும் வழங்க பள்ளிக் கல்வி இயக்குநர் கோரியுள்ளார்.

4) மேலே நான்காவதாகப் படிக்கப்பட்ட கடிதத்தில், 37,723 தொடக்க மற்றும் நடுநிலைப் பள்ளிகளுக்கு ஒரு பள்ளிக்கு ரூ.250/– வீதம் தேவைபடும் ரூ.94,31,000/– தொகையில் 2012–13–ஆம் ஆண்டிற்கு ஒதுக்கீடு செய்யப்பட்ட தொகை ரூ.70,00,000/– போக கூடுதலாக தேவைபடும் ரூ.24,31,000/– ம் ஒப்பளிப்பு ஆணை வழங்குமாறு தொடக்கக் கல்வி இயக்குநர் அரசை வேண்டியுள்ளார்.

5) பள்ளிக் கல்வி இயக்குநர் மற்றும் தொடக்கக் கல்வி இயக்குநர் கருத்துருக்கள் அரசால் ஆய்வு செய்யப்பட்டது. ஆண்டுதோறும் இவ்விழாச் செலவிற்கான நிதியை அனைத்து பள்ளிகளுக்கும் பரவலாக பகிர்ந்தளித்து இவ்விழாவினை கொண்டாடுவதற்குப் பதிலாக இந்நிதியைப் பயன்படுத்தி பரிசளிப்புத் திட்டம் ஒன்றினை ஏற்படுத்தி சிறந்த பள்ளிகளை தேர்வு செய்து பரிசளிப்பதன் மூலம் பள்ளிகள் சிறப்பாக செயல்படுவதை ஊக்குவிக்கும் வகையில் இக்கல்வி வளர்ச்சி நாள் விழா கொண்டாடுவது பயனுள்ளதாக இருக்கும் என கருதப்பட்டது. எனவே, இதனடிப்படையில் 2012–ஆம் ஆண்டு பெருந்தலைவர் காமாரசரின் பிறந்த நாளான ஜூலை 15–ம் நாளினை கல்வி வளர்ச்சி நாளாக அனைத்து பள்ளிகளிலும் கொண்டாடுவதற்கு கீழ்க்கண்டவாறு அரசு ஆணையிடுகிறது:–

அ. 2012–ஆம் ஆண்டு ஜூலை 15 கல்வி வளர்ச்சி நாள் விழாவினை பள்ளியின் வளர்ச்சி நிதி அல்லது அனைவருக்கும் கல்வி / அனைவருக்கும் இடைநிலைக் கல்வி திட்டங்களின் கீழ் பெறப்படும் மானியத்தை பயன்படுத்தி கொண்டாடுவதற்கு பள்ளிக் கல்வி இயக்குநர் /தொடக்கக் கல்வி இயக்குநருக்கு அனுமதி அளிக்கப்படுகிறது.

ஆ. 2012–ஆம் ஆண்டு முதல், ஆண்டுதோறும் இவ்விழாவிற்கென ஒதுக்கீடு செய்யப்படும் நிதியினை கொண்டு சிறந்த பள்ளிகளை ஊக்குவிப்பதற்கான "பரிசளிப்பு திட்டம்" (Award Scheme) ஒன்றினை ஏற்படுத்தவும் அத்திட்டத்தின் கீழ் ஒவ்வொரு வருவாய் மாவட்டத்திலும் மூன்று சிறந்த பள்ளிகளை தேர்ந்தெடுத்து அப்பள்ளிகளின் உள்கட்டமைப்பு வசதியினை மேம்படுத்தப்படும்.

6) பரிசுத்திட்டம் குறித்த கருத்துருவினை உடனடியாக அரசுக்கு சமர்பிக்குமாறு பள்ளிக் கல்வி இயக்குநர் மற்றும் தொடக்கக் கல்வி இயக்குநர் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். சமர்ப்பிக்கப்படும் கருத்துரு சிறந்த பள்ளியினை தேர்ந்தெடுப்பதற்கான வழி முறைகள், பரிசு தொகைக்கான நிர்ணயம், அத்தொகையினை பயன்படுத்துவதற்கான நெறிமுறைகள் ஆகிய விவரங்களை உள்ளடக்கியதாக இருக்கவேண்டும் என அறிவுறுத்தப்படுகிறது.

6) இவ்வரசாணை நிதித்துறையின் அ.சா.கு.எண்.389/து.செ(கமு)/2012–1 நாள் 6.7.2012–ல் இசைவுடன் வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

த.சபிதா
அரசு முதன்மைச் செயலாளர்

பெறுநர்
பள்ளிக் கல்வி இயக்குநர், சென்னை–6.
தொடக்கக் கல்வி இயக்குநர், சென்னை–6.
மெட்ரிக்குலேஷன் பள்ளிகள் இயக்குநர், சென்னை–6.
ஆசிரியர் கல்வி, ஆராய்ச்சி மற்றும் பயிற்சி இயக்குநர், சென்னை–6.
திட்ட அலுவலர், அனைவருக்கும் கல்வி திட்டம், சென்னை–6.
கூடுதல் திட்ட அலுவலர் அனைவருக்கும் இடைநிலைக் கல்வித் திட்டம், சென்னை–6.

நகல்
முதன்மைச் செயலாளர், நிதித்துறை, சென்னை–9.
முதன்மைச் செயலாளர், பிற்படுத்தப்பட்டோர் (ம)
மிகவும் பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை, சென்னை–9.
முதன்மைச் செயலாளர், ஆதிதிராவிடர் (ம) பழங்குடியினர் நலத்துறை, சென்னை–9.
முதன்மைச் செயலாளர், நகராட்சி நிர்வாகம் (ம) குடிநீர் வழங்கல் துறை, சென்னை–9.
முதன்மைச் செயாளர், தமிழ் வளர்ச்சி அறநிலையங்கள் (ம) செய்தித் துறை, சென்னை–9.
இயக்குநர், கருவூலம் மற்றும் கணக்குத் துறை, நந்தனம், சென்னை–35.
சம்பளக் கணக்கு அலுவலர் (தெற்கு) நந்தனம், சென்னை–35
மாநிலக் கணக்காய்வுத் தலைவர், சென்னை–18/35.
இயக்குநர், கல்லூரிக் கல்வித் துறை, சென்னை–6.
இயக்குநர், பிற்படுத்தப்பட்டோர் (ம) மிகவும் பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை, சென்னை–5.
இயக்குநர், ஆதிதிராவிடர் (ம) பழங்குடியினர் நலத்துறை, சென்னை–5.
இயக்குநர், நகராட்சி நிர்வாகம் (ம) குடிநீர் வழங்கல் துறை, சென்னை–5.
முதலமைச்சரின் அலுவலகம், சென்னை–9.
முதுநிலை உதவியாளர், மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அலுவலர், சென்னை–9.
நிதி (கல்வி–II) (வ.செ.பொ–II) துறை, சென்னை–9

// ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

ந.க.எண்: 35301/எம்.இ2/2012
நாள்: 9.7.2012.

ஆர்.சேகர் 6/7/12
பிரிவு அலுவலர்.

உடன் உரிய நடவடிக்கைக்காக அனைத்து மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலர்களுக்கும் அனுப்பலாகிறது. இவ்வாணை பெறப்பட்டமைக்கு ஒப்புதல் அனுப்பவும், இப்பொருள் சார்பான அரசாணையின் நகல் பள்ளிக் கல்வி இயக்குநரின் அலுவலகத்திற்கும், அனைத்து மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலர்களுக்கும் தெரிவிக்கப்படுகிறது.

Directorate of School Education, NSS
Directorate of School Education

சுருக்கம்

பள்ளிக் கல்வி – முன்னாள் தமிழக முதலமைச்சர் பெருந்தலைவர் காமராசர் அவர்களின் பிறந்தநாளை கல்வி வளர்ச்சி நாளாக கொண்டாட ஒதுக்கப்பட்ட நிதியினைக் கொண்டு சிறந்த பள்ளிகளைத் தேர்ந்தெடுத்து, பரிசுத் தொகை வழங்குவதற்கான வழிமுறைகள் வகுத்தல் – ஆணை – வெளியிடப்படுகிறது.

---

பள்ளிக்கல்வி (பக5(1)) துறை

அரசாணை (நிலை) எண். 123

நாள் : 15.07.2013
(திருவள்ளுவராண்டு 2044,
ஆனி 31)

படிக்க :–

1. அரசாணை (நிலை) எண்.169, பள்ளிக் கல்வி (என்) துறை, நாள். 06.07.2012
2. பள்ளிக் கல்வி இயக்குநரின் கடித ந.க.எண்.35301/எம்/இ2/2012, நாள்.17.07.2012.
3. தொடக்கக் கல்வி இயக்குநரின் கடித ந.க.எண்.14234/ஜே3/2011, நாள். 22.01.2013.

ஆணை:–

மேலே முதலாவதாக படிக்கப்பட்ட ஆணையில் பெருந்தலைவர் காமராஜர் அவர்களின் பிறந்த நாளான ஜுலை 15–ம் நாளினை கல்வி வளர்ச்சி நாளாக கொண்டாடுவது சார்ந்து, 2012–ம் ஆண்டு முதல் மேற்காண் விழாவிற்கென ஒதுக்கீடு செய்யப்படும் நிதியினை கொண்டு சிறந்த பள்ளிகளை ஊக்குவிப்பதற்கான "பரிசளிப்பு திட்டம்" (Award Scheme) ஒன்றினை ஏற்படுத்தி, அத்திட்டத்தின் கீழ் ஒவ்வொரு வருவாய் மாவட்டத்திலும் மூன்று சிறந்த பள்ளிகளை தேர்ந்தெடுத்து அப்பள்ளிகளின் உட்கட்டமைப்பு வசதி மேம்படுத்தப்படும் என ஆணை வெளியிடப்பட்டுள்ளது. மேலும் அவ்வாணைப்படி, சிறந்த பள்ளியினை தேர்ந்தெடுப்பதற்கான வழி முறைகள், பரிசுத் தொகைக்கான நிர்ணயம், அத்தொகையினை பயன்படுத்துவதற்கான நெறிமுறைகள் ஆகிய விவரங்களை உள்ளடக்கிய கருத்துருக்களை அனுப்பி வைக்குமாறு பள்ளிக் கல்வி இயக்குநர் மற்றும் தொடக்கக் கல்வி இயக்குநர் கேட்டுக் கொள்ளப்பட்டனர்.

2. மேலே இரண்டாவதாக படிக்கப்பட்ட கடிதத்தில், 10 மற்றும் 12ம் வகுப்பு பொதுத் தேர்வில் மாவட்ட அளவில் முதல் மூன்று இடங்களைப் பெறும் பள்ளிகளை (1 அரசு உயர்நிலைப் பள்ளி, 2 மேல்நிலைப் பள்ளிகள்) முதன்மைக் கல்வி அலுவலர் மூலம் தேர்வு செய்யலாம் என்றும்; பள்ளியின் உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்தல் பொருட்டு, ஒருபள்ளிக்கு ரூ.1 இலட்சம் வீதம், ஒரு வருவாய் மாவட்டத்திற்கு ரூ.3 இலட்சம் என கணக்கிட்டு, 32 மாவட்டங்களுக்கு ரூ.96 இலட்சம் என நிர்ணயம் செய்யலாம் என்றும், இவ்விழாவிற்கு இந்நிதியாண்டிற்கு ரூ.13.70 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது என்றும், மொத்தம் தேவைப்படும் ரூ.96 இலட்சத்தில் இந்நிதியாண்டில் வரவு செலவு

திட்டத்தில் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள ரூ.13.70 இலட்சம் போக, ரூ.82.30 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யுமாறு பள்ளிக் கல்வி இயக்குநர் கோரியுள்ளார்.

3. மேலே, மூன்றாவதாக படிக்கப்பட்ட கடிதத்தில், ஒவ்வொரு வருவாய் மாவட்டத்திலும் மூன்று பள்ளிகளை மாவட்ட தொடக்கக் கல்வி அலுவலர் மூலம் தேர்ந்து எடுத்து ஒவ்வொரு பள்ளிக்கும் ரூ.1 லட்சம் வீதம் 3 பள்ளிகளுக்கு ரூ.3 இலட்சம் என கணக்கிட்டு, 32 வருவாய் மாவட்டங்களுக்கு ரூ.96 இலட்சம் நிர்ணயம் செய்ய வேண்டும் எனவும், இவ்விழா கொண்டாட 2012–ஆம் ஆண்டில் ஒதுக்கீடு செய்யப்பட்டு, செலவிடப்படாத தொகை ரூ.70 இலட்சம் போக, ரூ.26 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யுமாறு தொடக்கக் கல்வி இயக்குநர் கோரியுள்ளார்.

4. மேலே 2 மற்றும் 3–ல் படிக்கப்பட்ட கடிதங்களில் சிறந்த பள்ளிகளை தேர்ந்து எடுப்பதற்கான வழிமுறைகள் மற்றும் பரிசுத் தொகையினை பயன்படுத்து வதற்கான நெறிமுறைகளை பள்ளிக் கல்வி இயக்குநர் மற்றும் தொடக்கக் கல்வி இயக்குநர் பின்வருமாறு தெரிவித்துள்ளனர் :–

i) தேர்வு செய்யப்படும் பள்ளி அமைந்துள்ள குடியிருப்புப் பகுதியில் உள்ள மாணவ / மாணவியர்களை அதிக அளவில் சேர்த்திருக்க வேண்டும். மேலும், மாணவர்கள் இடை நிற்றலை பெருமளவில் தவிர்த்து இருக்க வேண்டும். ✓

ii) ஆசிரியர்களின் கற்பித்தல் திறன் சிறப்பாக அமைந்திருத்தல் வேண்டும். ✗

iii) புரவலர்களை அதிகப்படியாக சேர்த்து இருக்க வேண்டும். ✗

iv) கலை, இலக்கியம், நாடகம் போன்ற துறைகளில் மாணவர்களை ஊக்கப்படுத்துவதில் சிறந்து விளங்க வேண்டும், ✓

v) பொது மக்கள் மற்றும் தனியாரிடமிருந்து பள்ளியின் தரத்தை உயர்த்தும் வகையில் அவர்களது பங்களிப்பினை பெற்று பள்ளிக்குத் தேவைப்படும் தளவாட சாமான்கள் மற்றும் பல பயனளிக்கும் திட்டங்களை பெற்றிருக்க வேண்டும். ✗

vi) பள்ளியின் அனைத்து வகுப்பு மாணவர்களுக்குள், அனைத்துப் பாடங்களிலும் சராசரி கற்றல் அடைவுத்திறன் 60% சதவிகிதத்திற்கு மேல் இருத்தல் வேண்டும். ✓

vii) பள்ளியின் பெற்றோர் ஆசிரியர் கழகம், அன்னை ஆசிரியர் கழகம், கல்விக்குழு ஆகியவை முறையாகவும், சிறப்பாகவும் செயல்பட்டிருக்க வேண்டும். ✓

2/5

viii) மேலும், இப்பரிசளிப்பு திட்டத்தின் மூலம் பெறும் நிதியினைக் கொண்டு, அந்தந்தப் பள்ளிகளின் மாணவ / மாணவியரின் தேவைகளின் அடிப்படையில் குடிநீர் வசதி, சுகாதார வசதி, கழிப்பிட வசதி, ஆய்வகம் மற்றும் நூலக மேம்பாடு, கணினிகளுக்கான மின் இணைப்பு கட்டணம், விளையாட்டு திடல் பராமரிப்பு, சுற்றுச்சுவர் அமைத்தல் மற்றும் வெள்ளையடித்தல் போன்ற பள்ளிகளின் அத்தியாவசியத் தேவைகளை பூர்த்தி செய்ய வேண்டும். மாணவர்களின் பன்முகத்திறன் வளர்க்கும் கலை, இலக்கிய போட்டிகள் நடத்தி பரிசுகள் வழங்கிடலாம்.

5. பள்ளிக் கல்வி இயக்குநர் மற்றும் தொடக்கக் கல்வி இயக்குநரின் கருத்துருக்கள் அரசால் ஆய்வு செய்யப்பட்டு, பெருந்தலைவர் காமராசர் அவர்களின் பிறந்த நாளான ஜூலை 15 ஆம் நாளினை கல்வி வளர்ச்சி நாளாக கொண்டாட அனைவருக்கும் கல்வி / அனைவருக்கும் இடைநிலைக் கல்வி திட்ட நிதியினை பயன்படுத்திட ஆணையிடப்பட்டுள்ள நிலையில், அவ்விழாவிற்காக ஒதுக்கப்பட்ட நிதியினைக் கொண்டு சிறந்த பள்ளிகளை ஊக்குவிப்பதற்கான பரிசளிப்பு வழங்கும் திட்டத்தினை, கீழ்க்கண்டவாறு செயல்படுத்திட அனுமதி அளித்து அரசு ஆணையிடுகிறது :–

i) ஒவ்வொரு வருவாய் மாவட்டத்திலும் 4 பள்ளிகளை தேர்ந்தெடுத்து கீழ்க்கண்டவாறு பரிசுத்தொகை வழங்கப்பட வேண்டும்.

| பள்ளி | | பரிசுத்தொகை |
|---|---|---|
| ஆரம்பப் பள்ளி | – | ரூ. 25,000/– |
| நடுநிலைப் பள்ளி | – | ரூ. 50,000/– |
| உயர்நிலைப் பள்ளி | – | ரூ. 75,000/– |
| மேல்நிலைப் பள்ளி | – | ரூ. 1,00,000/– |
| | | ரூ.2,50,000/– |

ii) மேற்கண்டவாறு பரிசுத்தொகை வழங்கிட தொடக்கக் கல்வி துறைக்கு ரூ.24.00 இலட்சம், பள்ளிக்கல்வி துறைக்கு ரூ.56.00 இலட்சம் ஆகமொத்தம் ரூ. 80.00 இலட்சம் (ரூபாய் எண்பது இலட்சம் மட்டும்) ஒப்பளிப்பு செய்யப்படுகிறது.

iii) பரிசுத்தொகை வழங்கும் திட்டத்தினை 2013–14 ஆம் கல்வியாண்டு முதல் நடைமுறைப்படுத்தவேண்டும்.

3/5

iv) ஒவ்வொரு வருவாய் மாவட்டத்திலும் நான்கு பள்ளிகளை தெரிவு செய்ய மாவட்ட ஆட்சியர் (District Collector) தலைமையில் குழு அமைத்து, இக்குழுவில் முதன்மைக்கல்வி அலுவலர் (CEO), மாவட்ட தொடக்கக் கல்வி அலுவலர் (DEEO) ஆகியோர் உறுப்பினர்களாக இருத்தல்வேண்டும்.

v) மேலே பத்தி 4-ல் உள்ள சிறந்த பள்ளிகளை தேர்ந்தெடுப்பதற்கான வழிமுறைகள் மற்றும் பரிசுத் தொகையின் பயன்படுத்துவதற்கான நெறிமுறைகள் பின்பற்றப்பட வேண்டும்.

6. மேலே பத்தி-5(i) இல் ஒப்பளிக்கப்பட்ட செலவினம் கீழ்க்காணும் கணக்குத் தலைப்புகளின் கீழ் பற்று வைக்கப்படவேண்டும்.

<u>(i) 43,03 பள்ளிக் கல்வி இயக்ககம் – ரூ.56.00 இலட்சம் (புதிய கணக்குத் தலைப்பு)</u>
"2202-பொதுக்கல்வி -02 இடைநிலைக்கல்வி-800 ஏனைய செலவு-I திட்டத்தில் சேராதது – AS- சிறந்த பள்ளிகளுக்குப் பரிசு -59 பரிசுகளும் வெகுமதிகளும்
(கு.தொ.கு.2202-02-800-AS-5905)

<u>(ii) தொடக்கக் கல்வி இயக்ககம்– ரூ.24.00 இலட்சம்</u>
"2202-பொதுக்கல்வி -01 தொடக்கக் கல்வி-800 ஏனைய செலவு-I திட்டத்தில் சேராதது – AV- சிறந்த பள்ளிகளுக்குப் பரிசு -59 பரிசுகளும் வெகுமதிகளும்
(கு.தொ.கு.2202-01-800-AV-5900)

7. மேலே பத்தி-6(i)-ல் உள்ள புதிய கணக்குத் தலைப்பிற்கு பள்ளிக் கல்வி இயக்குநர் அவர்கள் மதிப்பீடு, கணக்கு நேரமைப்பு மற்றும் கட்டுப்பாட்டு அதிகாரியாவார்.

8. சம்பந்தப்பட்ட சம்பளக்கணக்கு அலுவலர்/கருவூலகணக்கு அலுவலர் மேற்காணும் புதிய கணக்குத் தலைப்பினை தங்கள் கணக்குகளில் துவக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

9. மேலே பத்தி-5 (ii)-ல் ஒப்பளிக்கப்பட்ட செலவினத்திற்கு தேவையான கூடுதல் நிதி 2013-2014 ஆம் ஆண்டிற்கான திருத்திய மதிப்பீடு/இறுதி திருத்த நிதியொதுக்கத்தில் "2202-02-800-AP-05.02 மற்றும் 2202-01-800-AZ-05.02" என்ற கணக்குத் தலைப்புகளிலிருந்து மறுநிதியொதுக்கத்தின் மூலம், மேலே பத்தி -6-ல் உள்ள கணக்குத் தலைப்புகளுக்கு ஒதுக்கீடுசெய்யப்படும், அவ்வாறு ஒதுக்கீடு செய்யப்படும்வரை இச்செலவினத்தை மேற்கொள்ள பள்ளிக் கல்வி இயக்குநர் / தொடக்கக் கல்வி இயக்குநர்களுக்கு அனுமதி அளிக்கப்படுகிறது. 2013-14 ஆம் ஆண்டிற்கான திருத்திய மதிப்பீடு / இறுதி திருத்த நிதியொதுக்கத்திற்கான

4/5

கருத்துருவினை நிதித்துறைக்கு அனுப்பிடும் பொழுது மேற்குறிப்பிட்ட செலவினத்தையும் சேர்த்து அனுப்புமாறு பள்ளிக் கல்வி இயக்குநர் / தொடக்கக் கல்வி இயக்குநர் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

10. இவ்வாணை நிதித்துறையின் அ.சா.எண்.34/JS(RSM)/கல்வி II/2013 நாள். 15.07.2013ல் வழங்கப்பட்ட ஒத்திசைவுடன் வெளியிடப்படுகிறது. கூடுதல் நிதியொதுக்கப் பேரேட்டு எண்.772 (எழுநூற்று எழுபத்திரண்டு).

(ஆளுநரின் ஆணைப்படி)

த. சபிதா,
அரசு முதன்மைச் செயலாளர்

பெறுநர்
பள்ளிக் கல்வி இயக்குநர், சென்னை-6.
தொடக்கக் கல்வி இயக்குநர், சென்னை-6.
மெட்ரிக்குலேஷன் பள்ளிகள் இயக்குநர், சென்னை-6.
ஆசிரியர் கல்வி, ஆராய்ச்சி மற்றும் பயிற்சி இயக்குநர், சென்னை-6.
திட்ட அலுவலர், அனைவருக்கும் கல்வி திட்டம், சென்னை-6.
கூடுதல் திட்ட அலுவலர், அனைவருக்கும் இடைநிலைக் கல்வித் திட்டம், சென்னை-6.
நகல்
முதன்மைச் செயலாளர், நிதித்துறை, சென்னை-9.
முதன்மைச் செயலாளர், பிற்படுத்தப்பட்டோர் (ம)
மிகவும் பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை, சென்னை-9.
முதன்மைச் செயலாளர், ஆதிதிராவிடர் (ம) பழங்குடியினர் நலத்துறை, சென்னை-9.
முதன்மைச் செயலாளர், நகராட்சி நிர்வாகம் (ம) குடிநீர் வழங்கல் துறை, சென்னை-9.
முதன்மைச் செயலாளர், தமிழ் வளர்ச்சி அறநிலையங்கள் (ம) செய்தித் துறை, சென்னை-9.
இயக்குநர், கருவூலம் மற்றும் கணக்குத் துறை, நந்தனம், சென்னை-35.
சம்பளக் கணக்கு அலுவலர் (தெற்கு) நந்தனம், சென்னை-35
மாநிலக் கணக்காய்வுத் தலைவர், சென்னை-18/35.
இயக்குநர், கல்லூரிக் கல்வித் துறை, சென்னை-6.
இயக்குநர், பிற்படுத்தப்பட்டோர் (ம) மிகவும் பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை, சென்னை-5.
இயக்குநர், ஆதிதிராவிடர் (ம) பழங்குடியினர் நலத்துறை, சென்னை-5.
இயக்குநர், நகராட்சி நிர்வாகம் (ம) குடிநீர் வழங்கல் துறை, சென்னை-5.
மாண்புமிகு முதலமைச்சரின் அலுவலகம், சென்னை-9.
முதுநிலை உதவியாளர், மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அலுவலர், சென்னை-9.
முதன்மைச் செயலாளரின் முதுநிலை தனிச்செயலர், பள்ளிக் கல்வித் துறை, சென்னை-9.
நிதி (கல்வி-II) ,(வ.செ.பொ-II) துறை, சென்னை-9.

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

பிரிவு அலுவலர்

The END

## சுருக்கம்

பள்ளிக் கல்வி - 2022 ஆம் ஆண்டில் முன்னாள் தமிழக முதலமைச்சர் பெருந்தலைவர் காமராசர் அவர்களின் பிறந்த நாளான ஜூலை திங்கள் 15 ஆம் நாளை கல்வி வளர்ச்சி நாளாக அனைத்து பள்ளிகளிலும் அரசின் சார்பில் விழா கொண்டாட அனுமதி மற்றும் சிறந்த பள்ளிகளைத் தேர்ந்தெடுத்து அப்பள்ளிகளுக்கு பரிசுத் தொகை வழங்க நிதி ஒப்பளிப்பு வழங்குதல் - ஆணை - வெளியிடப்படுகிறது.

---

### பள்ளிக் கல்வித் (பொது(2)) துறை

அரசாணை (நிலை) எண்.10

நாள் 11.01.2023
திருவள்ளுவர் ஆண்டு 2053
சுபகிருது வருடம், மார்கழி-27

படிக்கப்பட்டவை :

1. அரசாணை (நிலை) எண்.169, பள்ளிக் கல்வி (என்)த் துறை, நாள் 06.07.2012
2. அரசாணை (நிலை) எண்.123, பள்ளிக் கல்வித் 5(1) த் துறை, நாள் 15.07.2013.
3. பள்ளிக் கல்வி ஆணையரின் கடித ந.க.எண்.036801/ எம்/இ2/2022, நாள் 30.09.2022
4. தொடக்கக் கல்வி இயக்குநரின் கடித ந.க.எண். 029087/ ஜெ2/2022, நாள் 15.08.2022

---

ஆணை:-

மேலே முதலாவதாக படிக்கப்பட்ட அரசாணையில், பெருந்தலைவர் காமராசர் அவர்களின் பிறந்த நாளான ஜூலை 15-ம் நாளினை கல்வி வளர்ச்சி நாளாக கொண்டாடுவது சார்ந்து, 2012-ம் ஆண்டு முதல் மேற்காண் விழாவிற்கென ஒதுக்கீடு செய்யப்படும் நிதியினை கொண்டு சிறந்த பள்ளிகளை ஊக்குவிப்பதற்கான 'பரிசளிப்பு திட்டம்(Award Scheme)" ஒன்றினை ஏற்படுத்தி, அத்திட்டத்தின் கீழ் ஒவ்வொரு வருவாய் மாவட்டத்திலும் மூன்று சிறந்த பள்ளிகளை தேர்ந்தெடுத்து அப்பள்ளிகளின் உட்கட்டமைப்பு வசதி மேம்படுத்தப்படும் என ஆணை வெளியிடப்பட்டுள்ளது. மேலும் அவ்வாணைப்படி, சிறந்த பள்ளியினை தேர்ந்தெடுப்பதற்கான வழி முறைகள், பரிசுத் தொகைக்கான நிர்ணயம், அத்தொகையினை பயன்படுத்துவதற்கான நெறிமுறைகள் ஆகிய விவரங்களை உள்ளடக்கிய கருத்துருக்களை அனுப்பி வைக்குமாறு பள்ளிக் கல்வி இயக்குநர் மற்றும் தொடக்கக் கல்வி இயக்குநர் கேட்டுக் கொள்ளப்பட்டனர்.

2. மேலே இரண்டாவதாக படிக்கப்பட்ட அரசாணையில், சிறப்பு பரிசளிப்புத் திட்டத்தின் கீழ், ஒதுக்கீடு செய்யப்படும் பரிசுத் தொகையினை பயன்படுத்தி, ஒவ்வொரு வருவாய் மாவட்டத்திலும் ஒரு மேல்நிலைப் பள்ளி மற்றும் ஒரு உயர்நிலைப்பள்ளி, ஒரு நடுநிலைப்பள்ளி மற்றும் ஒரு ஆரம்பப்பள்ளி என நான்கு

பள்ளிகளைத் தேர்ந்தெடுத்து, வளர்ச்சிப் பணிகளை மேற்கொள்ள, வருவாய் மாவட்டத்திற்கு ரூ.2,50,000/- விதம் (மேல்நிலைப்பள்ளிக்கு ரூ.1,00,000/-, உயர்நிலைப்பள்ளிக்கு ரூ.75,000/-, நடுநிலைப் பள்ளிக்கு ரூ.50,000/- மற்றும் ஆரம்பப் பள்ளிக்கு 25,000/-) பரிசுத் தொகை வழங்க ஆணையிடப்பட்டுள்ளது.

3. மேலே மூன்றாவதாக படிக்கப்பட்ட கடிதத்தில், தமிழக அரசு பெருந்தலைவர் காமராசர் அவர்களின் பிறந்த நாளான ஜூலை 15-ஆம் நாளை கல்வி வளர்ச்சி நாளாக தெரிவிக்கப்பட்டு அனைத்துப் பள்ளிகளிலும் அரசின் சார்பில் விழா கொண்டாடவும், சிறப்பாக செயல்படும் அரசுப் பள்ளிகளைத் தேர்ந்தெடுத்து, அவற்றிற்கு "சிறப்பு பரிசளிப்பு வழங்கும் திட்டத்தினை", செயல்படுத்திடவும் அறிவுறுத்தப்பட்டுள்ளது எனவும் இவ்வாண்டிலும் மேற்குறித்த சிறப்பு பரிசளிப்பு திட்டத்தினை தொடர்ந்து ஊக்குவிக்கும் வகையில் தமிழக அரசால் வரவு-செலவு திட்டத்தில் ரூ.64.75 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது என்றும் இத்திட்டத்திற்கென 2019-20 ஆம் ஆண்டு தெரிவிக்கப்பட்ட நெறிமுறைகளைப் பின்பற்றி, 2023 ஆண்டிற்கும் ஒவ்வொரு மாவட்டத்திலும் மாவட்ட ஆட்சியர் அவர்களின் தலைமையில் குழு அமைத்து, இக்குழுவில் முதன்மைக் கல்வி அலுவலர் மற்றும் மாவட்டக் கல்வி அலுவலர் ஆகியோரை உறுப்பினர்களாகக் கொண்டு, பள்ளிக்கல்வி சார்பில் சிறந்த இரண்டு பள்ளிகள் (ஒரு மேல்நிலைப் பள்ளி மற்றும் ஒரு உயர்நிலைப் பள்ளி) தேர்ந்தெடுக்கப்படவேண்டும் எனவும் ஒவ்வொரு மாவட்டத்திலும் அவ்வாறு தேர்ந்தெடுக்கப்படும் பள்ளிகளுக்கான உட்கட்டமைப்பு வசதியினை மேம்படுத்தும் பொருட்டு, மாவட்டத்திற்கு ஒரு மேல்நிலைப் பள்ளிக்கு ரூ.1 இலட்சமும், ஒரு உயர்நிலைப் பள்ளிக்கு ரூ.75 ஆயிரமும் ஆக மொத்தம் ஒரு மாவட்டத்திற்கு ரூ.1.75 இலட்சம் விதம் 37 மாவட்டங்களுக்கு ரூ.64.75 இலட்சத்தினை (ரூபாய் அறுபத்து நான்கு இலட்சத்து எழுபத்தைந்தாயிரம் மட்டும்) சிறப்பு பரிசளிப்பு வழங்கும் திட்டத்தின் கீழ் 2022-23 ஆம் கல்வியாண்டில் பிரித்து வழங்க ஆணை வேண்டி பள்ளிக் கல்வி ஆணையர் கேட்டுக்கொண்டுள்ளார்.

4. மேலே நான்காவதாக படிக்கப்பட்ட கடிதத்தில், மேற்கண்ட செலவினங்களுக்காக 38 மாவட்டங்களுக்கு ரூ.28,50,000/- நிதி ஒதுக்கீடு தேவைப்படுகிறது எனவும் தற்போது 2022 - 2023 ஆம் கல்வியாண்டிற்கு வரவு செலவு திட்டத்தின் கீழ் ரூ.14,02,000/- (பதினான்கு இலட்சத்து இரண்டாயிரம் மட்டும்) நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது எனவும், எனவே 2022 – 2023 நிதியாண்டிற்கு பெருந்தலைவர் காமராசர் பிறந்த நாளை கல்வி வளர்ச்சி நாளாக கொண்டாடியதற்கு சிறப்பு பரிசளிப்புத் திட்டத்திற்கு கூடுதல் நிதி ஒதுக்கீடு ரூ. ரூ.14,48,000/- (ரூபாய் பதினான்கு இலட்சத்து நாற்பத்து எட்டாயிரம் மட்டும்) சேர்த்து ஒரே தவணை அரசாணையாக ரூ.28,50,000/- அனுமதித்து ஆணை வழங்கிடுமாறு தொடக்கக்கல்வி இயக்குநர் கேட்டுக்கொண்டுள்ளார்.

5. பள்ளிக் கல்வி ஆணையர் மற்றும் தொடக்கக் கல்வி இயக்குநரின் கருத்துருக்களை நன்கு ஆய்வு செய்த அரசு, அதனை ஏற்று 2022-2023 ஆம் ஆண்டில் பெருந்தலைவர் காமராசர் அவர்களின் பிறந்த நாளான ஜூலை திங்கள் 15 ஆம் நாளை "கல்வி வளர்ச்சி நாளாக" அரசின் சார்பில் அனைத்து பள்ளிகளிலும் விழாவினை கொண்டாட அனுமதியும், மேலே இரண்டாவதாக படிக்கப்பட்ட அரசாணையில் தெரிவிக்கப்பட்ட நெறிமுறைகளை பின்பற்றி சிறந்த பள்ளிகள் தேர்ந்தெடுக்கப்பட்டு, அப்பள்ளிகளில் உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்திட தொடக்கக் கல்வி இயக்ககத்திற்கு 2022-2023 நிதியாண்டில் வரவு செலவு திட்டத்தின் கீழ் ஏற்கனவே ஒதுக்கப்பட்ட தொகை ரூ.22,12,000/-ல் செலவினம் போக மீதமுள்ள தொகை ரூ.14,02,000/- மற்றும் கூடுதல் தொகை ரூ.14,48,000/- சேர்த்து ரூ.28,50,000/- மற்றும் பள்ளிக்கல்வி இயக்ககத்திற்கு வரவு செலவு திட்டத்தில்

ஒதுக்கப்பட்ட ரூ.64,75,000/- சேர்த்து மொத்தமாக ரூ.93,25,000/-ஐ (ரூபாய் தொண்ணூற்று மூன்று இலட்சத்து இருபத்து ஐந்தாயிரம் மட்டும்) நிதி ஒதுக்கீடும், மேற்படி செலவினத்தை இனிவரும் நிதியாண்டுகளில் நிலையான தொடர் செலவினமாக மேற்கொள்ள அனுமதியும் அளித்து அரசு ஆணையிடுகிறது.

6. மேலே பத்தி 5-ல் ஒப்பளிப்பு செய்யப்பட்ட செலவினம் கீழ்க்காணும் கணக்கு தலைப்புகளின் கீழ் பற்று வைக்கப்பட வேண்டும்:-

**பள்ளிக் கல்வி இயக்ககம் - ரூ.64.75 இலட்சம்**

"2202 - பொதுக்கல்வி – 02 இடைநிலைக்கல்வி – 800 ஏனைய செலவு– மாநிலச் செலவினங்கள் – AS – சிறந்த பள்ளிகளுக்குப் பரிசு – 359 பரிசுகளும் வெகுமதிகளும் - 01 பரிசுகளும் வெகுமதிகளும்" (த.தொ.கு.2202-02-800-AS-35901)

**தொடக்கக் கல்வி இயக்ககம் - ரூ.28.50 இலட்சம்**

"2202 - பொதுக்கல்வி – 01 தொடக்கக் கல்வி – 800 ஏனைய செலவு– மாநிலச் செலவினங்கள் – AV –சிறந்த பள்ளிகளுக்குப் பரிசு – 359 பரிசுகளும் வெகுமதிகளும் -01 பரிசுகளும் வெகுமதிகளும்" (த.தொ.கு.2202-01-800- AV-35901)

7. மேலே பத்தி-5-ல் ஒப்பளிக்கப்பட்ட செலவினத் தொகையினைப் பெற்று, இச்செலவினை மேற்கொள்ள பள்ளிக் கல்வி ஆணையர் மற்றும் தொடக்கக் கல்வி இயக்குநருக்கு அனுமதி அளிக்கப்படுகிறது.

8. மேற்படி செலவினம் தொடர் செலவினமாக ஆண்டுதோறும் ஏற்படும் நிலையில், தமிழக முன்னாள் முதல்வர் பெருந்தலைவர் காமராஜர் அவர்களின் பிறந்த நாளான ஜீலைத் திங்கள் 15-ஆம் நாளினை கல்வி வளர்ச்சி நாளாக பள்ளிகளில் அரசின் சார்பில் விழா கொண்டாட அனுமதி மற்றும் சிறப்பு பரிசளிப்புத் திட்டத்தின் கீழ் நிதி ஒப்பளிப்பு செய்ய பள்ளிக்கல்வி ஆணையரகம் மற்றும் தொடக்கக் கல்வி இயக்ககம் ஆகியோருக்கு அனுமதி வழங்கப்படுகிறது.

9. மேலே பத்தி 5-ல் ஒப்பளிக்கப்பட்ட செலவினத்திற்கான கூடுதல் நிதியொதுக்கம் ரூ.14,48,000/- 2202-01-800- AV-359-01-ன் தலைப்பின் கீழ் 2022-23-ம் ஆண்டிற்கான திருத்த மதிப்பீடு / இறுதி திருத்த நிதியொதுக்கத்தில் ஒதுக்கீடு செய்யப்படும். அத்தகைய ஒதுக்கீட்டை எதிர்நோக்கி மேலே பத்தி 5-ல் ஒப்பளிக்கப்பட்ட செலவினத்தை மேற்கொள்ள பள்ளிக் கல்வி ஆணையர்/ தொடக்க கல்வி இயக்குநர் அவர்களுக்கு அதிகாரம் அளிக்கப்படுகிறது. இருப்பினும் சட்டமன்றத்தின் ஒப்புதலை பெறும் பொருட்டு, ஒரு சிறப்பு நிகழ்வாக கருதி (SI) இச்செலவினத்தை 2022-23-ம் ஆண்டிற்கான துணை மதிப்பீடுகளில் சேர்க்கப்பட வேண்டும். இச்செலவனித்திற்கான உரிய கருத்துருவினை 2022-23-ஆம் ஆண்டிற்கான திருத்த மதிப்பீடு / இறுதி திருத்த நிதியொதுக்கம் மற்றும் துணை மதிப்பீடுகளில் (Supplementary Estimates 2022-23) சேர்க்கத் தக்கவகையில் உரிய விவரங்களுடன் நிதி (கல்வி-II/வ.செ.பொது-I)த் துறைக்கு அனுப்புமாறு பள்ளிக் கல்வி ஆணையர் /தொடக்க கல்வி இயக்குநர் கேட்டுக்கொள்ளப்படுகிறார்.

10. இவ்வாணை நிதித்துறையின் அ.சா.எண். 56199/கல்வி-II/2022, நாள் 10.01.2023-ல் வழங்கப்பட்ட ஒத்திசைவுடன் வெளியிடப்படுகிறது. இதற்கான கூடுதல் நிதியொதுக்கப் பேரேட்டு எண். 2248 ( இரண்டாயிரத்து இருநூற்று நாற்பத்தி எட்டு) (IFHRMS ASL No. 2023012248)

(ஆளுநரின் ஆணைப்படி)

காகர்லா உஷா
அரசு முதன்மைச் செயலாளர்

**பெறுநர்**

பள்ளிக் கல்வி ஆணையர், சென்னை-6.
தொடக்கக் கல்வி இயக்குநர், சென்னை-6.
மெட்ரிக்குலேஷன் பள்ளிகள் இயக்குநர், சென்னை-6.
மாநில திட்ட இயக்குநர், சமக்ரா சிக்ஷா, சென்னை-6.
இயக்குநர், மாநில கல்வியியல் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனம், சென்னை-6.
சம்பளக் கணக்கு அலுவலர் (தெற்கு) நந்தனம், சென்னை-35
மாநிலக் கணக்காய்வுத் தலைவர், சென்னை-18/35.

**நகல்**

அரசு முதன்மைச் செயலாளர், நிதித்துறை, சென்னை-9.
அரசு முதன்மைச் செயலாளர், பிற்படுத்தப்பட்டோர், மிகப் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத்துறை, சென்னை-9.

அரசு முதன்மைச் செயலாளர், ஆதிதிராவிடர் (ம) பழங்குடியினர் நலத்துறை, சென்னை-9.
முதன்மைச் செயலாளர், நகராட்சி நிர்வாகம் (ம) குடிநீர் வழங்கல் துறை, சென்னை-9.
அரசு முதன்மைச் செயலாளர், தமிழ் வளர்ச்சி (ம) செய்தித் துறை, சென்னை-9.
இயக்குநர், கருவூலம் மற்றும் கணக்குத் துறை, சைதாப்பேட்டை, சென்னை-15.
இயக்குநர், கல்லூரிக் கல்வித் துறை, சென்னை-6.
இயக்குநர், பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை, சென்னை-5.
இயக்குநர், மிகப் பிற்படுத்தப்பட்டோர் (ம) சீர்மரபினர் நலத்துறை, சென்னை-5.
இயக்குநர், ஆதிதிராவிடர் (ம) பழங்குடியினர் நலத்துறை, சென்னை-5.
இயக்குநர், நகராட்சி நிர்வாகம் (ம) குடிநீர் வழங்கல் துறை, சென்னை-5.
மாண்புமிகு முதலமைச்சரின் அலுவலகம், சென்னை-9.
மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சரின் அலுவலகம், சென்னை-9.
நிதி (கல்வி-II, வ.செ.பொ.I/ வ.செ.பொ.II) துறை, சென்னை-9.
பள்ளிக் கல்வி (அநமு / வரவு செலவு)த் துறை, சென்னை-9,
இருப்புக் கோப்பு.

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

அரசு சார்புச் செயலாளர்